بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 20/12/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹிஜ்ரி 6-ஆம் ஆண்டின் சில போர்கள், போர்ப் படைகள் ஆகியவற்றின் கண்ணோட்டத்தில் நபி (ஸல்) அவர்களின் வாழ்வு குறித்த விபரமும், உலகின் சீர்குலைந்த அரசியல் நிலைகளும் வானத்தின் ஆபத்துகள் தொடர்பாக துஆக்கள் செய்வது பற்றிய அறிவுரையும்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۞ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۞

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வின் அம்சமாகிய போர்கள், போர்ப்படைகள் ஆகியவை குறித்த நிகழ்வுகள் தொடர்பாக கூறப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக **உக்காஷா பின் மிஹ்ஸன் (عُكَّاشَه بِنْ مِحْصَنْ) ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நடத்திய போர்ப் படையைப்** பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கிறது. இந்தப் போர்ப் படை கமர் மர்ஸூக் என்ற இடத்தை நோக்கி ஹிஜ்ரி 6-ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதத்தில் சென்றது. ‘சீரத் காத்தமுன் நபிய்யீன்’ எனும் நூலில் எழுதப்பட்டுள்ளதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது முஹாஜிர் சஹாபி உக்காஷா பின் மிஹ்ஸன் ரழியல்லாஹு அன்ஹூ அவர்களை நாற்பது முஸ்லிம்களுக்கு படைத் தளபதியாக்கி பனூ அஸது கோத்திரத்தாரை நோக்கி போரிடுவதற்காக அனுப்பினார்கள். ஆனால் முஸ்லிம்களின் வருகைப் பற்றிய தகவல் அறிந்து அந்த மக்கள் சுற்றுப்புற இடங்களில் பிரிந்து சென்று விட்டனர்.

அவ்வாறே **இன்னொரு போர்ப் படை** பத்து மனிதர்களுடன் ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா **(مُحَمَّدْ بِنْ مَسْلَمَه)** ரழியல்லாஹு அன்ஹூ அவர்களின் தலைமையில் ஹிஜ்ரி 6-ஆம் ஆண்டு ரபீவுஸ் ஸானீ மாதத்தில் **பனூ சஃலபா (بَنُوْ ثَعْلَبَه)** மற்றும் மற்றவர்களின் பக்கம் அனுப்பப்பட்டனர். இந்த ஜமாஅத் அங்கு சென்றடைந்தபோது எதிரிகளின் நூறு பேர்கள் அவர்களை சுற்றி வளைத்துக் கொண்டனர். மேலும் ஈட்டிகள், அம்புகளால் தாக்கி அனைவரையும் ஷஹீதாக்கி விட்டனர். ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் கடுமையாக காயமடைந்த நிலையில் கீழே விழுந்தார்கள். எதிரிகள் (ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆடையை அவிழ்த்து விட்டு அங்கேயே கிடக்குமாறு விட்டு விட்டனர். ஒரு முஸ்லிம் கொலையுண்டவர்களை கடந்து சென்றார். அவர் இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன் என்று கூறினார். ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் அதைக் கேட்டபோது அசைந்தார்கள். அந்த மனிதர் (ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு உணவு வழங்கினார். மேலும் அவர்களை வாகனத்தில் அமர்த்தி மதீனாவுக்கு கொண்டு வந்தார்.

ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களின் நண்பர்களின் ஷஹாதத்திற்குப் பொறுப்பாக இருந்த எதிரிகளைப் பழிக்குப்பழி வாங்குவதற்காக செய்த ஒரு போர்ப் படை பற்றி குறிப்பு கிடைக்கிறது. இது **'அபூ உபைதா பினில் ஜர்ராஹ் (ரலி) அவர்களின் போர்ப் படை'** என்று அழைக்கப்படுகிறது. இது பற்றிய விபரத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் எழுதியிருப்பதாவது, ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களின் நண்பர்களின் ஷஹாதத்துடன் பனூ ஸஃலபா கூட்டத்தினர் மதீனாவைச் சுற்றியுள்ள இடங்களைத் தாக்குவதற்கு நாடியுள்ளனர் என்ற செய்தியும் கிடைத்திருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பினில் ஜர்ராஹ் (ரலி) அவர்களின் தலைமையில் நாற்பது தகுதி படைத்த சஹாபிகளை அனுப்பினார்கள். இரவோடு இரவாக பயணம் செய்து அதிகாலைக்குள் அங்கு சென்றடைந்து விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழிகாட்டி இருந்தார்கள். கட்டளைக்கேற்ப செயல்பட்டவாறு அவர்கள் சரியாக காலை நேரத்தில் எதிரிகளை சுற்றி வளைத்து விட்டனர். மேலும் (எதிரிகளாகிய) அவர்கள் கொஞ்சம் போரிட்ட பிறகு வெறுண்டோடி விட்டனர். ஹஸ்ரத் அபூ உபைதா பினில் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் போர்ச் செல்வங்களை கைப்பற்றி, மதீனா திரும்பி வந்தார்கள்.

இந்தத் துணிவுள்ள செயலில் எந்த இரு சஹாபிகளைப் பற்றி குறிப்பு வருகின்றதோ அதாவது ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி), மற்றும் ஹஸ்ரத் அபூ உபைதா பினில் ஜர்ராஹ் (ரலி) ஆகிய இருவரும் பெரும் சஹாபிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் தனது சொந்த பண்புகள் மற்றும் தகுதி ஆகியவை மட்டுமின்றி, கஅப் பின் அஷ்ரஃப் என்ற யூதனைக் கொன்ற வீரமிக்கவராகவும் இருந்தார்கள். ஏனெனில் இந்த குழப்பவாதி அவர்களின் கைகளாலேயே தனது தண்டனையை அடைந்திருந்தான். ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் அன்சார் மக்களில் அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தில் அவர்களின் சிறப்பான நம்பிக்கைக்குரியவராக கருதப்பட்டு வந்தார்கள். அதன்படி, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பொதுவாக (ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா ரழியல்லாஹு அன்குஹு ஆகிய) இவர்களையே தனது ஆளுனர்களைப் பற்றிய முறையீடுகளை ஆய்வு செய்வதற்காக அனுப்பி வைத்து வந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு முஸ்லிம்களுக்கு இடையில் உட்புறமான குழப்பங்களின் வாசல் திறந்தபோது ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் தனது வாளை ஒரு கல்லின் மீது உடைத்து தனது கையில் ஒரு பிரம்பை எடுத்துக் கொண்டார்கள். ஒருவர் அவர்களிடம் இதற்கான காரணத்தைக் கேட்டபோது, அவர்கள் கூறியதாவது, முஸ்லிம்களிடம் கொலை, கொள்ளையின் வாசல் திறந்து விடும்போது நீர் வாளை உடைத்து ஓர் அறையில் ஒரு தரை விரிப்பு கிடப்பது போன்று மறைவாக அமர்ந்து விடுவீராக என்றே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து நான் கேட்டிருக்கிறேன் எனக் கூறினார்கள். இந்தக் கட்டளை அநேகமாக ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களுக்காக அல்லது அந்தக் குழப்பத்திற்காக குறிப்பாக இருந்தது. இல்லையென்றால், சில நேரங்களில் உட்புறமான குழப்பங்களை எதிர்ப்பதும் ஓர் உயரிய மார்க்கத் தொண்டு என்ற வகையைச் சேர்ந்ததாக இருக்கிறது.

**இன்னொரு சஹாபி ஹஸ்ரத் அபூ உபைதா பினில் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் ஆவார்கள்.** இவர்கள் மிக உயரிய சஹாபிகளைச் சேர்ந்தவராக இருந்தார்கள். மேலும் குரைஷி கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவர்களுக்கு அமீனுல் மில்லத் (சமுதாயத்தின் நம்பிக்கைக்குரியவர்) என்ற பட்டத்தைச் சூட்டியிருந்தார்கள்** என்பதிலிருந்து இவர்களின் மகத்துவம் வெளிப்படுகிறது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத்

அபூபக்ர் (ரலி) அவர்கள் எந்த இரண்டு சஹாபிகளை கிலாஃபத்திற்கு தகுதியானவராகக் கருதி இருந்தார்களோ அவர்களில் இவர்களும் ஒருவர் ஆவார். ஹஸ்ரத் அபூ உபைதா பினில் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் பிளேக் நோயால் மரணமடைந்து ஷஹீதானார்கள். *(இறை தண்டனை என்று இல்லாமல் சாதாரணமாக 'பிளேக் நோயால் மரணமடைபவர் ஷஹீது ஆவார்' என்ற நபிமொழியின்படி, இவர்களை ஷஹீதானார்கள் என்று ஹுஸூர் அய்யதஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் – மொழிபெயர்ப்பாளர்).*

பின்னர் **இன்னொரு போர்ப் படை, ஸைது பின் ஹாரிஸா** (زَيْدُ بنُ حَارِثَة) **எனும் போர்ப் படையாகும்.** இது ஹிஜ்ரி 6-ஆம் ஆண்டு ரபீவுல் ஆகிர் மாதத்தில் (இஸ்லாத்தின் எதிரிகளாகிய) பனூ சுலைம் கோத்திரத்தை நோக்கி அனுப்பப்பட்டார்கள். அவ்வாறே இன்னொரு போர்ப் படை ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் தலைமையில் 170 சஹாபிகளுடன் ஹிஜ்ரி 6-ஆம் ஆண்டு ஜமாதில் ஊலா மாதத்தில் அய்ஸ் (عَيْص) என்ற இடத்தை நோக்கி அனுப்பப்பட்டது. இந்த நிகழ்வுகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மருமகன் அபுல் ஆஸ் பின் ரபீஃ (اَبُو العَاصِ بنُ رَبِيْعَ) அவர்கள் சிறைப்படிக்கப்பட்டது பற்றியும், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது பற்றியும் குறிப்பு கிடைக்கிறது. இவர் தனது வணிக செல்வங்களுடன் முஸ்லிம்களின் பிடியில் சென்று விட்ட பிறகு மதீனா வந்தார். மேலும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மகள் ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களிடம் புகலிடம் வேண்டினார். ஹஸ்ரத் ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அவருக்கு புகலிடம் வழங்கினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இது பற்றித் தெரிய வந்தபோது, அவர்கள் மக்களிடம், எனக்கும் இப்போதுதான் இது பற்றி தெரிய வந்திருக்கிறது. நானும் அவரை அறியாதிருந்தேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் விண்ணப்பத்தின்படி, அபுல் ஆஸ் என்பவரின் செல்வத்தை (அவருக்கே) திருப்பிக் கொடுத்து விடுமாறு பரிந்துரை செய்தார்கள். அதனால் அபுல் ஆஸ் என்பவரின் செல்வத்தை மட்டுமின்றி, மற்ற எல்லா மனிதர்களின் செல்வங்களும் திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டன. அபுல் ஆஸ் மக்காவுக்குத் திரும்பிச் சென்றார். மேலும் அந்தச் செல்வங்களை மக்களுக்குத் திருப்பிக் கொடுத்து விட்டு, தான், இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்ட அறிவிப்பை செய்தார்கள். இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்ட அறிவிப்பை செய்த பிறகு அபுல் ஆஸ் மதீனாவுக்கு வந்தார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைனப் அவர்களை எந்தவொரு புதிய நிகாஹ்வுமின்றி (அபுல் ஆஸ் அவர்களிடம்) திருப்பி அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அபுல் ஆஸ் (ரலி) அவர்களின் வாணிபம் மக்காவில் இருந்தது. எனவே அவர்கள் மதீனாவில் அதிகமாக தங்கியிருக்க முடியவில்லை. அவர்கள் மக்காவுக்கு திரும்பி வந்தார்கள். ஹிஜ்ரி 12-ஆம் ஆண்டு ஹஸ்ரத் அபுல் ஆஸ் (ரலி) அவர்கள் மரணமடைந்தார்கள்.

**பனூ லஹ்யான் என்ற ஒரு போர்** ஹிஜ்ரி 6-ஆம் ஆண்டு ஜமாதில் ஊலா மாதத்தில் நடந்தது. இதன் பின்னணியாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் குறிப்பிடும்போது, பனூ லஹ்யான் (கோத்திரத்தினர்) பத்து அப்பாவி முஸ்லிம்களை மிகவும் இரக்கமின்றி ஷஹீதாக்கியபோது ரஜீஃ {رَجِيْع} (என்ற இடத்தில் நடந்த கொலை) நிகழ்வாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். பனூ லஹ்யான் (கோத்திரத்தினர்) அப்போது வரை முஸ்லிம்களுக்கு எதிராக சதித் திட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (பனூ லஹ்யான் என்ற கோத்திரத்தினராகிய) அவர்களுக்கு ஓரளவுக்கு தண்டனை கொடுப்பதை பொருத்தமானதாகக் கருதினார்கள். அதன்படி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடன் இரு நூறு சஹாபிகளுடனும், இருபது

குதிரைகளுடனும் அவர்களை நோக்கி சென்றார்கள். (பனூ லஹ்யான் கோத்திரத்தினராகிய) அவர்களுக்குத் தெரியாத நிலையிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு சென்றடைந்து விட்டார்கள். ஆயினும் (பனூ லஹ்யான் கோத்திரத்தினராகிய) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகையைப் பற்றிய செய்தி கிடைத்து விட்டது. மேலும் அவர்கள் மலைகளின் உச்சிகளுக்கு சென்றடைந்து விட்டனர். அவர்களில் எவரையும் பிடிக்க முடியவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒன்றிரண்டு நாள்கள் அங்கு தங்கியிருந்தார்கள். மேலும் பல குழுக்களை சுற்றுப்புறங்களுக்கு அனுப்பினார்கள். ஆயினும் எவரையும் பிடிக்க முடியவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்தப் பயணத்தில் தமது சஹாபிகள் ஷஹீதான அந்த இடத்தை சென்றடைந்தபோது, அவர்களுக்கு மிகவும் அதிகமான உருக்கம் ஏற்பட்டு விட்டது. அவர்கள் மிகவும் மன உருக்கத்துடன் அந்த ஷஹீதானவர்களுக்காக துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் எழுதுவதாவது, இந்தப் பயணத்திலிருந்து திரும்பி வரும்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு துஆ செய்தார்கள். அதை பிற்காலத்தில் முஸ்லிம்கள் பொதுவாக தமது பயணத்திலிருந்து திரும்பும்போது செய்கின்றனர். அந்த துஆ இதுவாகும்:

إٰيِبُوْنَ تَائِبُوْنَ عَابِدُوْنَ سَاجِدُوْنَ لِرَبِّنَا حَامِدُوْنَ

(ஆயிபூன தாயிபூன ஆபிதூன சாஜிதூன லிரப்பினா ஹாமிதூன்). அதாவது நாம் நம் இறைவன் பக்கம் திரும்புபவர்கள் ஆவோம்; அவன் பக்கமே குனிபவர்கள் ஆவோம்; அவனையே வணக்குபவர்கள் ஆவோம்; அவனுக்கு முன்னாலேயே விழுபவர்கள் ஆவோம்; நம் இறைவனின் புகழைப் பாடுபவர்கள் ஆவோம்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது பிறகுள்ள பயணத்திலும் பொதுவாக இந்த துஆவை செய்து வந்தார்கள். மேலும் இத்துடன் சில நேரத்தில் இந்த துஆவையும் செய்து வந்தார்கள்: صَدَقَ اللهُ وَعْدَهٗ وَنَصَرَ عَبْدَهٗ وَهَزَمَ الْاَحْزَابَ وَحْدَهٗ (சதகல்லாஹு வஃதஹூ வநஸர அப்தஹூ வஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹூ). அதாவது நம் இறைவன் தனது வாக்குறுதியை நிறைவேற்றினான். தன் அடியார்களுக்கு உதவி செய்தான். எதிரிகளின் படைகளை தனது கட்டளையால் அழித்து விட்டான். இந்த துஆ ஒரு சிறப்பான நிலையை தன்னுள் கொண்டுள்ளது. மேலும் இந்த துஆவினால் துன்பம் நிறைந்த அந்தக் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய உள்ளத்தில் இருந்த அந்த உணர்வுகளைத் தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. அந்த உணர்வுகளை நபி (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களிடம் உருவாக்க விரும்பி இருந்தார்கள். முஸ்லிம்களின் இறைவணக்கத்திலும், இஸ்லாத்தைப் பற்றி அமைதி நிறைந்த தப்லீகின் வழியில் விதிக்கப்பட்ட தடையை அல்லாஹ் நீக்குவானாக என்ற துடிப்பு இந்த துஆவில் மறைந்திருந்தது.

ஒரு போர்ப் படை ஸைது பின் ஹாரிஸா ஆகும். அது ஹிஜ்ரி 6-ஆம் ஆண்டு ஜமாதில் ஆகிர் மாதத்தில் நடந்தது. இந்தப் போர்ப் படைக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை பதினைந்து பேர்களுடன் பனூ ஸஃலபா பின் ஸஅது (بَنُوْ ثَعْلَبَه بِنْ سَعَدْ) நோக்கி அனுப்பி வைத்தார்கள். இந்தப் போர்ப் படையின்போது போருக்கான நிலை ஏற்படவில்லை.

*இந்தத் தொடர் மேலும் தொடரும் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறிய பிறகு உலகில் மிக விரைவாக மாறிவரும் நிலைகளைப் பற்றி கூறினார்கள்:* உலகிலுள்ள நிலைகளைப் பற்றி அனைவரும் அறிவார்கள். **சிரியாவில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலைகள் இன்னும் தெளிவாகவில்லை. ஓர் அநியாயமான, பலவந்தமான ஆட்சி முடிவுக்கு வந்து விட்டது என நாவால் கூறப்படுகிறது. வரக் கூடிய அரசாங்கம்**

**நீதியை கடைபிடிக்கக் கூடியதாக இருக்க துஆ செய்யுங்கள். அல்லாஹ் அந்த இடங்களில் இருக்கும் அஹ்மதிகளை தனது பாதுகாப்பில் வைப்பானாக.** அனுபவம் மிக்க எழுத்தார்கள் எழுதுவதாவது, வெளிப்படையில் அநீதி முடிவுக்கு வந்து விட்டது என்பதில் பொதுமக்கள் மகிழ்ச்சி கொண்டாடுகின்றனர். ஆனால் இனிமேல் என்ன நடக்கும் என்பது பற்றி ஒன்றும் தெரியாது. **இஸ்ரேலும் அந்த இடங்களில் தகாத தாக்குதல்களை செய்து கொண்டிருக்கிறது. இஸ்லாமிய உலகிற்கு எதிராக அவர்களின் எண்ணங்கள் வெளிப்படையில் பகிங்கரமானவையாகத் தெரிகின்றன.** இந்தக் கோணத்தில் பாகிஸ்தானுக்காகவும் மிகவும் அதிகமாக துஆ செய்யுங்கள். ஈரான் மற்றும் பிற நாடுகளுக்காகவும் துஆ செய்யுங்கள். **அல்லாஹ் முஸ்லிம்களுக்கும் அறிவை வழங்குவானாக. அல்லாஹ் எல்லா அஹ்மதிகளையும் பாதுகாப்பானாக. அஹ்மதிகள் முஸ்லிம்களின் கைகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பது மட்டுமின்றி, முஸ்லிம்களுக்கு எதிராக இருக்கின்ற மற்றவர்களிடமிருந்தும் பாதுகாப்பாக இருக்கட்டுமாக.** *மேலும் ஹுஸூர் (அய்யத்ஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* **இன்றைய காலத்தில் உலகில் அதிகமாக சூறாவளிக் காற்றுகளும் வந்து கொண்டிருக்கின்றன. வானத்தின் இந்த ஆபத்துகளிலிருந்தும் அல்லாஹ் பாதுகாப்பானாக.**

*குத்பாவின் இறுதிப் பகுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இரண்டு மர்ஹூம்களைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். ஒருவர், மீர்பூர்காஸ் (Meerpur Khaas) நுஸ்ரதாபாதைச் சேர்ந்த தர் முஹம்மது (Dar Muhammad) சாஹிப் அவர்களின் மகன் மதிப்பிற்குரிய அமீர் ஹசன் மரான்ட்ரீ சாஹிப் அவர்கள். இவரை டிசம்பர் 13-ஆம் தேதி காலையில் துப்பாக்கியால் சுட்டு ஷஹீது ஆக்கி விட்டார்கள். இன்னொருவர், மலேஷியாவின் முபல்லிக் மதிப்பிற்குரிய மவ்லானா அப்துஸ் சாத்தார் சாஹிப் அவர்களின் இயற்கை மரணத்தை அறிவித்து அவர்களைப் பற்றிய நல்ல விஷயங்களை எடுத்துக் கூறினார்கள். மேலும் காயிப் ஜனாஸா தொழுகை தொழ வைப்பதாக அறிவித்தார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மர்ஹூம்களின் மன்னிப்பிற்காகவும், உயர்ந்த அந்தஸ்துகளுக்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: Moulavi O.M.Muzzammil Ahmad H.A)